www.padippakam.com



# களம் பல கண்ட யாழ் கோட்டை

## பகுதி: ஒன்று


## பிலிப் தே ஒலிவேறா

### நீலவண்ணன்

### 3

### 1622 ஆம் ஆண்டு கோடைகால இறுதி

போர்த்துக்கேயரால் கட்டப் பட்ட யாழ்ப்பாணக் கோட்டை இன்று அழிந்துள்ள கோட்டைபோன்று, நட்சத்திர வடிவத்தினை / ஐங்கோண வடிவத்தினையுடையதன்று. அது ஒரு சதுர வடிவக் கோட்டையாகும். கட்டப்படவிருக்கும் கோட்டையின் மாதிரி வடிவம், பிலிப் தே ஒலிவேறாவின் முன் வைக்கப்பட்டிருந்தது. அவன் அதனை அடங்கா ஆவலோடு நோக்கினான்.



போர்த்துக்கேயரின் யாழ்ப்பாணக் கோட்டை: அதன் கிழக்குப் பாகத்தில் அமைந்துள்ள சீதாரி (பறங்கித் தெரு நகரம்), வடக்கே காணப்படும் பெரியகடை (நகரம்) - (வலன்ரைனின் வரைபு - 1726)

சதுர வடிவமான கோட்டை உயர்ந்த அரண் சுவர்களைக் கொண்டிருந்தது. நான்கு மூலைச் சுவர்களிலும் பலமான கொத்தளங்கள் அமைந்திருந்தன. அவற்றில் வடகிழக்குக் கொத்தளமும், தென்மேற்குக் கொத்தளமும் வேலின் முனைப்பு வடிவிலும், தென்கிழக்குக் கொத்தளமும், வடமேற்குக் கொத்தளமும் முக்கால் வட்டவடிவிலும் அமைந்திருந்தன. இக் கொத்தளங்களை இணைக்கும் அரண் சுவர்கள் (Rampart) அடித் தளத்தில் 40 அடிகள் அகலமானதாயும், மேற்புறத்திலிருந்து உயர்ந்து நின்றன. இந்த அரண் சுவர்களின் மையப் பகுதிகள் நான்கிலும் 20 அடிகள் அகலமான பகுதி வெளிப்புறமாகப் புடைத்து, மேலதிக சிறிய கொத்தளங்களாகக் காட்சி தந்தன. அவற்றில் மூன்று அரைவட்ட வடிவிலும், ஒன்று 'ப' வடிவிலும் புடைத்து நின்றிருந்தன. 'ப' வடிவப் புடைப்பை, கோட்டையின் தென் அரண்சுவர் கொண்டிருந்தது. தென் அரண்சுவரின் அடிவாரத்தில், யாழ்ப்பாணக் கடலின் அலைகள் மெதுவாகத் தழுவி அலையெறிந்தன. கடனீரேரி ஊடாக வரும் மரக்கலங்கள் தூரத்தில் நங்கூரமிட்டு நிற்க, சிறிய வள்ளங்கள் மூலம் கோட்டையின் தென் அரண் சுவரையடுத்துள்ள இறங்கு துறையை அடையக்கூடிய கட்டமைப்புக்கள் இருந்தன.

கொத்தளங்களும், அரண்சுவர்களும்-போர்வீரர்களும், யுத்த தளபாடங்களும் இடரின்றி நகரக்கூடிய இடவசதியைக் கொண்டிருந்தன. கொத்தளங்களில் பீரங்கி வெளிகள் அமைந்திருந்தன. கடலை நோக்கிய அரண்சுவரின் இரண்டு பெரிய கொத்தளங்களில் பீரங்கி வெளிகள் அமைந்திருந்தன. கடலை நோக்கிய அரண்சுவரின் இரண்டு பெரிய கொத்தளங்களில் மும்மூன்று பீரங்கிகள் பொருத்தப்பட்டிருந்தன. 'ப' வடிவச் சிறு புடைப்புக் கொத்தளத்தில் மூன்று பீரங்கிகள் நிறுத்தப்பட்டிருந்தன. இந்தத் தென்னரண்சுவரின் ஒன்பது பீரங்களின் தாக்குதல்களுக்குத் தப்பி, எந்த எதிரிக் கலமும் கோட்டையை அணுகிவிட முடியாது என ஒல்வேறா நம்பி இறுமாந்தான். மேற்குப்புற அரண்சுவரில் ஐந்து பீரங்கிகள் பொருத்துவதற்கான வெளிகளும், வடபுற அரண்சுவரில் நான்கு பீரங்கிகள் பொருத்தக் கூடிய வெளிகளும் காணப்பட்டன. கிழக்குப்புற அரண்சுவர் 10 பீரங்கிகளைக் கொண்டிருந்தது. இக் கிழக்குப் புறமே தரைப்புறமான கோட்டை வாயிலைக் கொண்டிருந்தது. கோட்டையைச் சுற்றி ஒருபுறமும் கடலும், ஏனைய மூன்று பக்கங்களும் 20 அடி அகலமான அகழியைக் கொண்டிருந்தன. ஓர் இணைப்புப் பாலம் தேவைக்கேற்ப இறக்கி, தூக்கக்கூடிய விதமாகக் கிழக்கு அகழிக்கும் கோட்டை வாயிலிருக்கும் இடையிலிருந்தது.

கிழக்கு அரண்சுவரில் காவல் கோபுரங்கள் ஆறு அமைக்கப்பட்டிருந்தன. துப்பாக்கி ஏந்திய வீரர்கள் தரைப்புறமான கோட்டை வாயிலை எதிரிகள் அணுகாது காக்க இவை உதவின. கோட்டையினுள் காமாந்தோர், கப்பித்தான், வேன்ட்றிக்ஸ், கூப்மன்ஸ், ஓண்ட கூப்மன்ஸ், பிரிடிக்கன்ஸ் முதலான போர்த்துக்கேய அதிகாரிகளின் மாளிகைகள் அமைந்திருந்தன. கத்தோலிக்க தேவாலயம், படைவீரர் பாசறைகள் என்பனவும் அமைந்திருந்தன. கடல் நீரை அகழிக்குள் வெகு பக்குவமாக விட்டிருந்தார்கள். கடலிலிருந்து அகழிக்குள் எவரும் நுழைந்துவிடாதிருக்கப் பலமான கம்பிக் கிறாதிகளைத் தடுப்பிட்டிருந்தார்கள்.

மொத்தத்தில் போர்த்துக்கேயரின் யாழ்ப்பாணக்கோட்டை பலமும் கம்பீரமும் கொண்ட அதிசயற்புதமான கட்டமைப்பைக் கொண்டிருந்தது. பிலிப் தே ஒலிவேறா திருப்தியுடன் புன்னகைத்தான். மாதிரி வடிவத்தின்படி கட்டி முடிக்குமாறு கட்டளை பிறப்பித்தான். 'இது பத்தேவியாவிலுள்ள ஒல்லாந்தக் கோட்டையிலும் பார்க்கப் பெரியது' எனப் பின்னர் பால் தேயஸ் சுவாமிகள் வியக்கப் போகிறார்.

கோட்டை கட்டும் செயற்பாடு ஆரம்பமானது. வருடத்தில் ஒன்பது மாதங்களுக்குக் கோட்டை கட்டும்பணி நடந்தது. அகழியில் வெட்டிய மண்ணை அரண்சுவர்களுள் நிரப்பினர். மழை பெய்யத் தொடங்கியதும் கோட்டை கட்டுகின்ற பணி நிறுத்தப்படும். கோடை காலத்திலே ஏற்பட்ட வைசூரியும், மாரிகாலத்தில் ஏற்பட்ட நோயும் சிலவேளைகளில் கோட்டை கட்டுவதைத் தடை செய்தன. எனினும், போர்த்துக்கேயரின் யாழ்ப்பாணக் கோட்டை 1625 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப் பட்டது.

யாழ்ப்பாணக் கோட்டைக்குள் 150 பறங்கி வீரர்களைக் கொண்ட மூன்று பட்டாளங்கள் இருந்தன. ஒவ்வொரு வீரனுக்கும் அவன் கலியாணமாகாதவனாக இருந்தால் மாதம் ஒன்றுக்கு பன்னிரண்டு பணமும், கலியாணமானவனாக இருந்தால் மாதமொன்றுக்கு 24 பணமும் வழங்கப்பட்டன. அவசியமான காலங்களில் தேவைப்படும் உணவுப் பொருட்கள் கோட்டைக்குள் வேண்டிய மட்டும் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டன. கோட்டைக்குள் எப்போதும் 300 கண்டி நெல்லும் அரிசியும் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. அறுவடைக் காலங்களில் சேமிக்கப்பட்டு, வருட முடிவில் விற்கப்பட்டு, பின் புது நெல்லும் அரிசியும் வாங்கி வைக்கப்பட்டன். அவ்வாறு சேமித்து வைப்பதற்குப் பந்தாயம் எனப்படும் நெற்கூடைகளைப் பயன்படுத்தினர்.

போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தில் கட்டிய கோட்டை போன்று வேறு பகுதிகளிலும் கோட்டைகளைக் கட்டியுள்ளனர். ஊர்காவற்றுறை (ஹெமன்ஹீல்), காங்கேசன்துறை, பருத்தித்துறை, வெற்றிலைக்கேணி, இயக்கச்சி, ஆனையிறவு முதலான பகுதிகளிலும் இவர்கள் கோட்டைகளை அமைத்தனர். ஆனால் இவை யாழ்ப்பாணக் கோட்டை போன்று பெரியன வல்ல.

பிலிப் தே ஒலிவேறா, நல்லூரை விட்டகன்று கோட்டை மாளிகைக்குள் தனது படையினரோடும், பரிவாரத்தோடும் குடியமர்ந்தான். கோட்டைக்குக் கிழக்கே பரந்து கிடந்த நிலத்தைத் தமிழ்க் கத்தோலிக்கர்களுக்கும், பறங்கியருக்கும் பகிர்ந்து கொடுத்தான், கோட்டை கட்டி எஞ்சிய கற்களைப் பயன்படுத்திப் புதியதொரு நகரம் அங்கு உருவானது. 'சீதாரி' என அந்நகரைப் போர்த்துக்கேயர் அழைத்தனர். நல்லூர் மக்கள் அதனைப் 'பறங்கித்தெரு' என்று அழைத்தனர். அச் சீதாரியில் பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த கண்ணாடிப் பாதிரியார் என்று அழைக்கப்பட்ட பேதுரு தே பெற்றன்சோ என்பவர் வெற்றி மாதா கோயிலைக் (அற்புத மாதா கோயிலை) கட்டி முடித்தார். அவ்விடத்தில் இருந்த முஸ்லீம் பள்ளிவாசலைத் தீக்கிரையாக்கிவிட்டு, இத் தேவாலயத்தைக் கண்ணாடிப் பாதிரியார் கட்டியமைத்தார்.

யாழ்ப்பாணப் பட்டினத்தின் தேசாதிபதி கப்பித்தான் மேஜர் சில வேளைகளில் கோட்டைக்குள்ளிருந்து பரிவாரங்களுடன் சீதாரிக்கு வருவான். 80 லாஸ்கரின் வீரர்கள் அணிவகுத்து முன்னும் பின்னும் நடந்துவர, 4 ஆராய்ச்சிமார் மெய்க்காப்பாளராக இருபுறமும் வர, ஒலிவேறா குதிரையிற் பவனி வருவான். இவர்களை விட 5 அடப்பச் சேவகர்கள் பணிவாக வர, 2 கேடயக்காரர் ஒருவர் மாறி ஒருவர் ஒலிவேறைவுக்குக் குடை பிடித்து வருவர். அவனது பவனியை முன்கூட்டியே அறிவிப்பன போன்று மூன்று தவிலடிப் போர் தமது மேளங்களைத் தட்டியவாறு நடப்பர்.

1627, மார்ச், 22ம் திகதி பிலிப் தே ஒலிவேறா தனது 53 ஆம் வயதில் மரணமடைந்தான். அவன் சடலம் அற்புதமாதா கோயிற் படிகளுக்கருகில் அடக்கம் செய்யப்பட்டது. அவனுக்குப் பின் யாழ்ப்பாணத்தின் கப்பித்தான் மேஜராக லாங்றோட் தே செயிக்ஸாஸ் காபிறேரா என்பவன் பதவியேற்றான்.

(தொடரும்)

**பிலிப் தே ஒலிவேறா, நல்லூரை விட்டகன்று கோட்டை மாளிகைக்குள் தனது படையினரோடும், பரிவாரத்தோடும் குடியமர்ந்தான். கோட்டைக்குக் கிழக்கே பரந்து கிடந்த நிலத்தைத் தமிழ்க் கத்தோலிக்கர்களுக்கும், பறங்கியருக்கும் பகிர்ந்து கொடுத்தான், கோட்டை கட்டி எஞ்சிய கற்களைப் பயன்படுத்திப் புதியதொரு நகரம் அங்கு உருவானது. 'சீதாரி' என அந்நகரைப் போர்த்துக்கேயர் அழைத்தனர். நல்லூர் மக்கள் அதனைப் 'பறங்கித்தெரு' என்று அழைத்தனர். அச் சீதாரியில் பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த கண்ணாடிப் பாதிரியார் என்று அழைக்கப்பட்ட பேதுரு தே பெற்றன்சோ என்பவர் வெற்றி மாதா கோயிலைக் (அற்புத மாதா கோயிலை) கட்டிமுடித்தார்.**

படிப்பகம்